உ
அன்னவர்க்கே சரண் நாங்களே

மாருதி விருது

# அவுஸ்திரேலியக் கம்பன் கழகம்



***அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி***
***அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர்க்காக ஏகி***
***அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலான் ஊரில்***
***அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்பான்***
***- கம்பன்***

பேரன்புடையீர் வணக்கம்,

தமிழின் தலைமைப் புலவனாம் ‘கவிச்சக்கரவர்த்தி’ கம்பன் பெயரில் கழகம் அமைத்து, அவுஸ்திரேலியா வாழ் தமிழ் மக்களிடையே கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ்ப்பணியாற்றிவரும் ‘அவுஸ்திரேலியக் கம்பன் கழகம்’ தனது இவ்வருடக் கம்பன் விழாவினை, எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் சிட்னியில் சிறப்பாக நடாத்தவிருக்கின்றது.

தமிழ் மொழியினதும், தமிழ்ச் சமுதாயத்தினதும் உயர்வுக்காக அவுஸ்திரேலிய மண்ணில் தன்னலமற்ற சேவையாற்றிய ஒருவரை, தமிழ்ப் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் தேர்வுசெய்து, அவுஸ்திரேலியக் கம்பன் கழகம் தனது இவ்வருடத்திற்கான உயர் ‘மாருதி’ விருதினை, நடைபெறவுள்ள கம்பன் விழாவில் வழங்கவிருக்கின்றது.

மேற்படி விருதுக்கான பரிந்துரைகள், அவுஸ்திரேலியா வாழ் தமிழ் மக்களிடமிருந்து ஞாயிற்றுக்கிழமை 20-08-2017ஆம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன.

பரிந்துரைகளுக்கான பொதுவான அறிவுறுத்தல்களும், உரிய பரிந்துரைப் படிவமும் இங்கே தரப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியத் தமிழ்ச் சமூக அமைப்புகளோ அல்லது தனிநபரோ பரிந்துரைகளை அனுப்பி வைக்கலாம். பரிந்துரைக்கப்படுபவர் தெரிவிற்கான பின்வரும் வரையறைகளை பெரிதும் திருப்திப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவிற்கான வரையறைகள்**

- பரிந்துரைக்கப்படுபவர், அவுஸ்திரேலிய மண்ணில் தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவராகவோ, அல்லது அவுஸ்திரேலிய தமிழ்ச் சமுதாய மேம்பாட்டுக்கு முன்னின்று உழைத்தவராகவோ, அல்லது தமிழர்கள் தலை நிமிரத்தக்க வகையில் எத்துறையினூடாகவாவது சாதனை நிகழ்த்தியவராகவோ இருத்தல் வேண்டும்.
- மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவரெனின், அவரின் பங்களிப்பு இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ்த் துறைகளில் எத்துறை சார்ந்தும் இருக்கலாம்.
- பரிந்துரைக்கப்படுபவர், மேற்குறிப்பிடப்பட்ட துறைகளில் ஏதாவது ஒன்றில், சேவை நோக்கில், தொடர்ச்சியாக அளப்பரிய சேவையாற்றியவராக இருத்தல் வேண்டும்.

பரிந்துரைப்பவர் 18வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

பரிந்துரைப்பவர், பரிந்துரைக்கப்படுபவரின் சேவையைப் பற்றி, A4 தாளில் இரு பக்க அளவில், தமிழில் அச்சுப்பதித்து அல்லது தெளிவான கையெழுத்தில் எழுதி, அனுப்புதல் வேண்டும்.

பரிந்துரைகளை எழுதும்போது தயவு செய்து, பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளவும்.

- கழக மாருதி விருதுக்குழுவின் தீர்மானத்தின்படி; 2014ம் ஆண்டிலிருந்து, ‘மாருதி’ விருதுக்காக நீங்கள் பரிந்துரைகள் சமர்ப்பித்து, உங்களால் பரிந்துரைக்கப்பட்டவர் விருதுக்குரியவராக அவ்வாண்டு தேர்ந்தெடுக்கப்படாத பட்சத்தில், நீங்கள் சமர்ப்பித்த அப்பரிந்துரை இவ்வாண்டிலும், எதிர்வரும் ஆண்டுகளிலும் மீள்பரிசீலனைக்காக உட்படுத்தப்படும்.
- குறித்த துறையில் பரிந்துரைக்கப்படுபவர் ஆற்றிய பங்களிப்பு எத்தகையது என்பதைக் குறிப்பிடவும்.
- அவருடைய பங்களிப்பு ஏன் காத்திரமானதும் தனித்துவமானதுமாக விளங்குகிறது என்பதைத் தெளிவுறுத்தவும்.
- குறித்த துறையில் பரிந்துரைக்கப்படுபவர் ஆற்றிய பங்களிப்புக்காகப் பெற்ற விருதுகள், கௌரவங்கள் என்பன இருந்தால் குறிப்பிடவும்.
- பூர்த்தி செய்யப்பட்ட பரிந்துரைப் படிவத்தோடு, முழுமையான பரிந்துரைகள் 20.08.2017 ஆம் திகதிக்கு முன்னதாக மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவைப்பதாயின், பரிந்துரை படிவமும், பரிந்துரைகளும் pdf அல்லது jpg வடிவத்தில் மட்டுமே அனுப்பி வைக்கப்படவேண்டும்.

***மின்னஞ்சல் முகவரி : kambanaustralia@kambankazhagam.org***

விருதுக்குரியவரைத் தேர்ந்தெடுப்பதற்காக பிரத்தியேகத் தேர்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு விருதுக்குரியவரின் தெரிவை, பெறப்படும் பரிந்துரைகளின் எண்ணிக்கையிலன்றி, அவை கொண்டிருக்கும் தகவல்களின் அடிப்படையில் பரிசீலித்து, குறுந்தெரிவுப் பட்டியலொன்றை அவுஸ்திரேலியக் கம்பன் கழகத்தினரிடம் கையளிக்கும். அவுஸ்திரேலியக் கம்பன் கழகத்தினர், அக் குறுந்தெரிவுப் பட்டியலிலிருந்து, மிகப் பொருத்தமானவரை ‘மாருதி’ விருதுக்குரியவராகத் தேர்ந்தெடுப்பர். இத்தேர்வில் அவுஸ்திரேலியக் கம்பன் கழகத்தினரின் முடிவே இறுதியானது.

மேலதிக விபரங்களுக்கு : மின்னஞ்சல் - kambanaustralia@kambankazhagam.org
செல்லிடப்பேசி இல - 0424 023 234

நன்றி

அவுஸ்திரேலியக் கம்பன் கழகத்தினர்

# மாருதி விருதுக்கான பரிந்துரைப் படிவம் - 2017

## பரிந்துரைக்கப்படுபவர் விபரம் :

பரிந்துரைக்கப்படுபவரின் முழுப்பெயர்: (தமிழில்) : ______________________

(ஆங்கிலத்தில்) : ______________________

பிறந்த திகதி : பிறந்தநாடு : ______________________

முகவரி : ______________________

தொலைபேசி இல : ______________ செல்லிடப்பேசி இல : ______________________

பரிந்துரைக்கப்படுபவர் அவுஸ்திரேலிய நாட்டில் பிறக்காதவராயின் குடிபெயர்ந்த ஆண்டு :

பரிந்துரைக்கப்படுபவரின் வதிவிட நிலை : (அவுஸ்திரேலியக் குடியுரிமை / நிரந்தர வதிவிடவுரிமை / ஏனையவை)

பரிந்துரைக்கப்படுபவர், சமூக அமைப்புகள் மூலமாக சேவையாற்றியிருப்பின் அவ்வமைப்புகளைக் குறிப்பிடுக.

______________________

______________________

## பரிந்துரைப்பவர் (முன்மொழிபவர்) விபரம் :

முழுப்பெயர் : ______________________ வயது : __________

முகவரி : ______________________

தொலைபேசி இல : ______________ செல்லிடப்பேசி இல : ______________________

நீங்கள் அவுஸ்திரேலியத் தமிழ்ச் சமூக அமைப்பொன்றின் சார்பாகப் பரிந்துரைக்கின்றீர்கள் என்றால்,

அமைப்பின் பெயர் : ______________________ அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு : __________

பரிந்துரைப்பவர் இவ்வமைப்பில் வகிக்கும் பதவி : ______________________

நான், அவுஸ்திரேலியக் கம்பன் கழகத்தினர் வழங்கும் 'மாருதி' விருதுக்கான வரையறைகளையும் நிபந்தனைகளையும் முழுமையாகப் புரிந்து கொண்டும், ஏற்றுக் கொண்டும் மேற்படி பரிந்துரையை அவ்விருதுக்காக முழுமனதோடு சமர்ப்பிக்கின்றேன். எனது அறிவுக்கெட்டியவரையில் இப்பரிந்துரையில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்களனைத்தும் உண்மையானவை என்பதை உறுதி செய்கின்றேன்.

______________________ ______________________

கையொப்பம் திகதி

## வழிமொழிபவர் விபரம் :

முழுப்பெயர் : ______________________ வயது : __________

முகவரி : ______________________

தொலைபேசி இல : ______________ செல்லிடப்பேசி இல : ______________________

______________________ ______________________

கையொப்பம் திகதி

குறிப்பு: மேற்படி விண்ணப்பத்தில், மேலதிக விபரங்கள் தேவைப்படுமிடத்து நீங்கள் குறிப்பிட்ட தொடர்பு வழிகளில் நாம் உங்களோடு தொடர்பு கொள்வோம்.